(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 26 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2008, ஒற்றோபர் 07, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0055 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்செயல் நிகழ்வு நிதியிலிருந்து 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட பணம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி, நிதியில் இருந்து, 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பத்து பிரதான செலவினங்களையும்,

(iii) இந் நிதியத்திற்கு பொறுப்பாக இருக்கும் அதிகாரியின் பெயரையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) தற்செயல் நிகழ்வு நிதியத்தின் நிதிப்பாய்ச்சல் கூற்றினை அவர் சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) தற்செயல் நிதியத்தினூடாகச் செய்யப்பட்ட செயற்பாடுகளை வருடாந்தம் பாராளுமன்றத்திற்கு அறிவிக்காததன் காரணம் என்ன என்பதையும், அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0056 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றை வரையான கடந்த மூன்று வருடங்களில் -

(i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் (இ.பெ.கூ.) கொண்டு வரப்பட்ட மசகு எண்ணெய், மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற் பத்திப் பொருட்களின் கொள்வனவு விலை என்ன என்பதையும்,

(ii) எந்த நாடுகளிலிருந்து அவற்றை நாம் கொள்வனவு செய்கிறோம் என்பதை அவற்றின் விலைகளுடன் தனித்தனியாகவும்,

(iii) இவ் வியாபாரம் மேற்கொள்ளப்படும் முகவரின் பெயர் என்ன என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படும் சகல விதமான கொள்வனவுகளுக்கும் ஐக்கிய இராச்சியத்தில் ஒரு நபர் மாத்திரமே தரகராக செயற்படுகிறார் என்பது உண்மையா,

(ii) ஆம் எனில் , அதற்குரிய காரணம் என்ன என்பதையும்,

(iii) இல்லையெனில், ஏனையவர்களின் பெயர்களையும்,

(iv) தரகர்/முகவர் மூலமாக செயற்படுகின்ற பொழுது கிடைக்கின்ற நன்மைகள் எவை என்பதையும்,

(v) தரகர்/ முகவருக்கு செலுத்தப்பட்ட தரகுப்பணம் எவ்வளவு என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0057/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக் கையையும்

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச் சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவு களுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0140 / '08

4.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலிலன் முன் மஹரகம பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலின் பின் மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி ஜனாதிபதித் தேர்தலின் பின் குறித்த பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை யென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0141/ '08

5.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலின் முன் ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலின் பின் ஹோமாகம பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி ஜனாதிபதித் தேர்தலின் பின் குறித்த பிரதேச செயலகப் பிரிவுக்குள்

அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0142/ '08

6.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலின் முன் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருந்த -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணி க்கை எவ்வளவென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தலின் பின் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் இன்றுவரை உள்ள -

(i) வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) வெளிநாட்டு குடிவகைகளைக் கொண்ட விடுமுறை இல்லங்களின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்,

(iii) வெளிநாட்டுக் குடிவகைகளைக் கொண்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வள வென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்படி ஜனாதிபதித் தேர்தலின் பின் குறித்த பிரதேச செயலகப் பிரிவுக்குள் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு குடிவகை விற்பனை நிலையங்கள், விடுமுறை இல்லங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் உரிமையாளர்களது பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0178 / ' 08

7.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— கமத்தொழில், கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்கு இருக்கும் அரசுக்குரிய விவசாயப் பண்ணைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த விவசாயப் பண்ணை ஒவ்வொன்றினதும் பரப்பளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இந்த விவசாயப் பண்ணை ஒவ்வொன்றும் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டுவரை வருடாந்தம் எவ்வளவு விதை நெல்லை உற்பத்தி செய்தன என்பதையும்,

(iv) சிறு போகம் மற்றும் பெரும்போகத்துக்கு தேவைப்படும் விதை நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(v) ஒவ்வொரு போகத்துக்கும் தேவைப்படும் விதை நெல்லில் எந்தளவு அரச பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நெற்செய்கைக்குத் தேவையான சிறந்த தரத்திலான விதை நெல்லினை பெறமுடியாமல் விவசாயிகள் அசௌகரியத்துக்குள்ளாகி இருப்பதை அவர் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0179 / ' 08

8.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— கமத்தொழில், கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டுக்குத் தேவையான பெரிய வெங்காயம் எந்தளவு இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதையும்,

(ii) 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை அந்தந்த வருடங்களில் எவ்வளவு பெரிய வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பெரியவெங்காய செய்கைக்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்காக இருக்கும் அரச பண்ணைகளின் மூலம் 1987 தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு பெரிய வெங்காய விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்,

(ii) இந்த ஒவ்வொரு பண்ணைகள் மூலம் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எவ்வளவு பெரியவெங்காய விதை வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்டது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) சிறந்த தரத்திலான பெரியவெங்காய விதைகள் கிடைக்காமையினால் பெரிய வெங்காய செய்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள் மிகவும் அசௌகரியத்துக் குள்ளாகியிருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) பெரியவெங்காய செய்கை பின்னடைவு கண்டிருப்பின் பெரியவெங்காயச் செய்கையை விருத்தி செய்ய எத்தகைய வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0180 / ' 08

9.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அநுராதபுர விமானப்படை முகாமின் ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கான பணிகள் எந்த நிறுவனத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதற்காக எத்தனை நிறுவனங்கள் முன்வந்தன என்பதையும்,

(iv) எந்த நிறுவனத்துக்கு விலைமனு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கு எவ்வளவு தொகை மதிப்பீடு செய்யப்பட்டது என்பதையும்,

(ii) இந்த விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்கு எவ்வளவு பரற்கற்கள் தேவைப்படுகின்றன என்பதையும்,

(iii) தேவைப்படும் பரற்கற்களில் எந்தளவு பரற்கற்கள் முகாமுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதையும்,

(iv) இந்த விமான நிலைய ஓடுகளத்தை விஸ்தரிப்பதற்காக ஏற்றிவரப்படும் பரல்கற்களுக்கான அரச பங்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறெனின் எந்த நிறுவனத்துக்கு எவ்வளவு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0306 / ' 08

10.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி ஏற்ற பின்னர் இற்றைவரை வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொண்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்,

(ii) அவற்றில் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட விஜயங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அவ்விஜயங்களில் அமைச்சருடன் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி விஜயங்களில் அமைச்சரின் தனிப்பட்ட பணியாட்தொகுதி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருப்பின் அவர்களது பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iii) அமைச்சர் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள் பயணம் செய்த விமானக்கம்பனி மற்றும் விமான வகுப்பு யாவையென்பதையும்,

(iv) மேற்படி விஜயங்களுக்காக அமைச்சர் உட்பட உத்தியோகத்தர்களுக்காக அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் தனித்தனியாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி வெளிநாட்டு விஜயங்களினால் இந்த நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டுக்கடன்கள், கருத்திட்டங்கள் அல்லது வேறு நன்மைகள் யாவையென்பதை அவர் அந்தந்த விஜயம்ரீதியாக தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0307/ ' 08

11.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள் திணைக்களத்திற்கு இடைச்சேர்க்கப்பட்ட கமநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தியாளர்களின் முதலாம் தரத்திற்குத் தேவையான தகைமைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி முதலாந்தரப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக எவரேனும் சிலர் போலிக் கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளார்களா என்பதையும்,

(iii) ஆமெனில், இவர்கள் யாரென்பதையும்,

(iv) இவ்வாறாக போலிச்சான்றிதழ்களைச் சமர்ப்பித்த எவரேனும் ஊழியர்கள் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்டதன் மூலம் இவர்களுக்கு நிவாரணமளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) இவர்களின் பெயர்கள் மற்றும் அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) இவ்விடயத்தின் போது அரச கொள்கைகளுக்கு இணங்கியொழுகாத வகையில் சிலரின் மனித உரிமைகள் மீறப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அடிப்படைத் தகைமைகளின்றி அநீதிக்குள்ளாகியுள்ளவர்களுக்கு II ஆம் தரத்தைப் பெற்றுத்தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0308 / ' 08

12.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி பொலிஸ் நிலையத்திற்குச் சொந்தமான 60 ஸ்ரீ 6000 எனும் இலக்கமுடைய பயணிகள் பேருந்து 2003.08.24 ஆம் திகதி எக்காரணத்திற்காக கொழும்புவரை ஓட்டிச்செல்லப்பட்டதென்பதையும்,

(ii) அதில் பயணித்தவர்கள் யாரென்பதையும்,

(iii) பயணித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பேருந்து சம்பந்தப்பட்ட ஓட்டப்பதிவேட்டில் அன்றைய தினம் கையெழுத்திட்டவர் யாரென்பதையும்,

(ii) எக்கடமைக்காக அது ஈடுபடுத்தப்பட்டதென்பதையும்,

(iii) அன்றைய தினம் பேருந்தை செலுத்திய சாரதியின் பெயர் என்ன வென்பதையும்,

(iv) பேருந்தில் பயணித்தவர்கள் எந்தக் கடமையில் கலந்து கொள்வதற்காக பயணித்தார்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0458/ ' 08

13.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் யோதகண்டிய கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை, பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0459 / ' 08

14.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரலிஹெல கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண் ணிக்கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0460 / ' 08

15.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரவில கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2008 ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப் படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

கல்வி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 212, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் நானூற்றி நாற்பத்தியொரு மில்லியன், எண்ணூறாயிரம் (ரூபா 441,800,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | ரூபா |
|---|---|---|---|
| தலைப்பு 212 | — | இலங்கை பரீட்சைத் திணைக்களம் | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 441,800,000 |
| | | ஆக்கப்பொருட் செலவு | — |
| | | மொத்தம் | 441,800,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, ஓகத்து மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 5 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 15,070,180,332.

*3.

இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு .

*5.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

தேசிய பொதுவழிகள்  சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம்  — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் —  இரண்டாம் மதிப்பீடு.

*12.

இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம்  (ஏப்பிறல் 04, 2006) [1].

*17.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*20.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத் துடன் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 37 ஆம் இலக்க கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

### 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2006 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத் தின் இரண்டாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலங்கைப் புகையிரதத் திணைக்கள பண்டகசாலை முற்பணக் கணக்கு" — இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன் :-

(i) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப் பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை ரூபா 1,000,000,000 இலிருந்து ரூபா 680,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக் கப்பட்ட பற்றுமீதியின் உச்ச எல்லை ரூபா 3,800,000,000 இலிருந்து ரூபா 3,900,000,000 வரை.

(iv) அச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை ரூபா 400,000,000 இலிருந்து ரூபா 550,000,000 வரை.

(இக்கட்டளை 2007.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் :* மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2008.08.28.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன் கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 1),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து

குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,- அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 153(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்கள் 2008.01.04 ஆம் திகதியிலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, கணக்காய்வாளர் தலைமை அதிபதி பதவிக்குரிய எஸ். எல். 4 ரூபா 47,515-12x1,425 — 64,615 சம்பள அளவுத்திட்டத்தின் ரூ. 58,915 சம்பளத்திட்டத்தில் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. திரு. சுவர்ணஜோதி அவர்கள் பதவி வகிக்கும் காலம் வருடாந்த ஏற்றத்தை வழங்குவதற்கும் 2008.08.06 ஆம் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப் பட்டது. ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி திரு. எஸ். சுவர்ணஜோதி அவர்களுக்கு 2008.01.04 ஆந் திகதியிலிருந்து ரூ. 58,915 மாதாந்த சம்பளத்தை வழங்கவும், பதவிவகிக்கும் காலம் வரை பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு

மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக்

குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட

வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

33.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

35.

விசேட தேவைப்பாடுகள் கொண்ட சிறுவர்களுக்கான கோசல தூல்லாவ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தனாராமய செயற்சாதனைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்—இரண்டாம் மதிப்பீடு.

37.

பாஹியங்கல பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்—இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0377/ ' 08

1.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1978 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தேசிய வீடமைப்பு திணைக்களம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களின் மூலம் மாத்தளை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்கள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தேர்தல் தொகுதி அடிப்படையில் மாதிரி வீடுகள், சுய உதவித்திட்ட வீடுகள், கிராம எழுச்சி வீடுகள் என்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும் அவ்வீடுகளின் குடியிருப்பாளர்கள் (தற்போதைய உரிமையாளர்கள்) யார் என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0415/ ' 08

2.

கௌரவ பியசிறி விஜேநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) "தயட்ட கிருள 2008" கண்காட்சியில் பங்குபற்றிய நிறுவனங்கள் யாவை,

(ii) ஒவ்வொரு அமைச்சும் தமது அமைச்சுக்குரிய எந்த நிறுவனங்களை தயட்ட கிருள கண்காட்சியில் சேர்த்திருந்தது,

(iii) அத்தகைய ஒவ்வொரு திணைக்களத்தினதும் செலவு யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தயட்ட கிருள கண்காட்சியின் பொருட்டு அமைச்சுகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளால் ஏற்கப்பட்ட செலவு தனித்தனியாக எவ்வளவு,

(ii) மேற்படி செலவுகளுக்கான நிதி குறித்த நிறுவனத்திலிருந்தா அல்லது வேறு வழிகளின் மூலமா பெறப்பட்டது,

(iii) கண்காட்சியின் பொருட்டு செலவிடப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?